ESTD: 1947

விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி),
தேசிய தர மறுமதிப்பீட்டின் கீழ் 'ஏ' அந்தஸ்து தகுதி பெற்றது
குறைந்த கட்டணத்தில் உயர்தரக் கல்வி
விருதுநகர்.

* * * * *

19.06.2023

## சுற்றறிக்கை

கல்லூரியில் பயிலும் மாணவ/மாணவியர்கள் கல்லூரியின் அனைத்து வேலை நாட்களிலும் தவறாது வருகை புரிந்திட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றார்கள். மேலும், மாணவ/மாணவியர்கள் திட்டமிட்ட விடுப்புகளுக்கு கல்லூரி முதல்வர் அவர்களிடம் முன் அனுமதி பெறாமலும், மருத்துவ விடுப்பிற்கு உரிய ஆவணங்கள் தராமலும், தகுந்த காரணங்கள் இன்றியும் விடுப்பு எடுத்து, பருவத் தேர்விற்கு தேவையான வருகை சதவிகிதம் குறைவாக இருக்குமானால், அம்மாணவ/ மாணவியர்கள் பருவத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் வருகைப் பதிவு குறைவின் அடிப்படையில் பருவத்தேர்வுகள் எழுதவில்லையெனில் பின்வரும் கல்வியாண்டில் கல்லூரியில் அவர்களது படிப்பைத்தொடர இயலாது என இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

19/6/23

கல்லூரி முதல்வர்

குறிப்பு
துறைத் தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அதிக விடுப்பு எடுக்கும்
மாணவ/மாணவியர்கள் மீது தனிக்கவனம் செலுத்துமாறு
கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பெறுநர்
மாணவ / மாணவியர்கள் வகுப்பு சுற்றறிக்கை
மற்றும் துறை அறிவிப்புப் பலகைக்கு – துறைத் தலைவர்கள் மூலமாக.